# நீங்கள் கர்ப்பமா?
# அல்லது கர்ப்பமாக இருக்க வாய்ப்புள்ளதா?

**எக்ஸ்-ரே (மின்துகளி கதிர்வீச்சு) உங்கள் கருவிலுள்ள குழந்தைக்குத் தீங்கு விளைவிக்கக் கூடும்.**



PATIENTS. AT THE HEART OF ALL WE DO.®

Singapore General Hospital
SingHealth

# எக்ஸ்-ரே பரிசோதனைகளுக்குக் கர்ப்பநிலை விழிப்புணர்வு அவசியம்

நீங்கள் 9 முதல் 60 வயதுக்கு இடைப்பட்ட பெண்ணாக இருந்தால், நீங்கள் கர்ப்பமாக இருக்க வாய்ப்பு இருப்பதால், உங்களது கர்ப்பநிலையை நாங்கள் அறிவது அவசியம்.

எக்ஸ்-ரே அல்லது மின்துகளி கதிர்வீச்சு, கருவிலுள்ள குழந்தைக்கு ஆபத்தானது.

கருவிலுள்ள குழந்தை கதிர்வீச்சின் தாக்கத்திற்கு உள்ளாகும்போது, பிறவிக் குறைபாடுகள், புற்றுநோய்கள், குறிப்பிட்ட சிலவகை நோய்கள் ஏற்படக்கூடிய ஆபத்து அதிகரிக்கலாம். இந்த ஆபத்து, பரிசோதனையின் வகையையும் கதிர்வீச்சின் தாக்கத்தைக் குறைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளையும் பொறுத்து மாறுபடும்.

மின்துகளி கதிர்வீச்சைப் பயன்படுத்தும் பரிசோதனைகள்:

- எக்ஸ்-ரே அல்லது ரேடியோகிராஃப் (எ.கா. நெஞ்சு எக்ஸ்-ரே, வயிறு எக்ஸ்-ரே, எலும்புகள் எக்ஸ்-ரே)
- CT ஊடுகதிர் படமெடுப்பு (எ.கா. மூளை CT, வயிறு/இடுப்புக்கூடு CT, யூரோகிராம் CT, ஏஞ்சியோகிராம் CT)
- ஃபுளோரோஸ்கோப்பி (பேரியம் மீல், பேரியம் ஸ்வாலோ, கொலங்கியோகிராம்)
- மெமோகிராஃபி அல்லது மெமோகிராம்
- அணுசக்தி மருத்துவ ஊடுகதிர் படமெடுப்பு (எ.கா. PET CT, எலும்பு ஊடுகதிர் படமெடுப்பு)

## சம்பவங்கள் நடப்பதுண்டு

கர்ப்பமாக இல்லை என நினைத்த நோயாளிகள், பரிசோதனைக்குப் பிறகு கர்ப்பமாக இருப்பதைக் கண்டறிந்த சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. இதனால், அவர்களுக்குப் பெரும் மனத்தவிப்பும் மன உளைச்சலும் நேர்ந்தன.

எனவே, உங்களது கர்ப்பநிலை பற்றி உறுதியாகத் தெரியாவிட்டால் அல்லது கர்ப்பமாக இருக்க வாய்ப்பிருப்பதாக உங்களுக்குத் தோன்றினால் எங்கள் அலுவலரை அல்லது மருத்துவரை எப்போதும் அணுகுங்கள்.

# அதோடு உங்களுக்கு இடுப்புக்கூட்டில் உயர் கதிர்வீச்சு பரிசோதனைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தால், தயவுசெய்து பின்வருபவற்றைக் கவனத்தில் கொள்ளுங்கள்:

✓ நீங்கள் எச்சரிக்கை குறிப்புகளைக் கொண்ட ஆயத்தக் கடிதத்தைத் தபால்வழி பெறுவீர்கள்:

> **This is an examination with high radiation dose to the pelvis.**
> இது இடுப்புக்கூட்டில் உயர் கதிர்வீச்சுடன் செய்யப்படும் பரிசோதனை.

✓ இடுப்புக்கூட்டுப் பகுதியில் நெஞ்சுக்குக் கீழே, முழங்காலுக்கு மேலே உள்ள பகுதி உள்ளடங்கும்.

✓ **உங்களது மாதவிடாய் தொடங்கி 14 நாட்களுக்குள் மட்டுமே** இத்தகைய பரிசோதனைகளை நாங்கள் செய்யமுடியும். ஏனெனில், மாதவிடாய் தொடங்கி 14 நாட்களுக்குப் பிறகு நீங்கள் கர்ப்பமாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

✓ **உங்கள் பரிசோதனைக்கான தேதி, கடைசியாக மாதவிடாய் தொடங்கிய தேதியிலிருந்து 14 நாட்களுக்குப் பிறகு இருந்தால், தயவுசெய்து எங்களுடன் தொடர்புகொண்டு பரிசோதனைக்கான தேதியை மாற்றுங்கள்.**

- இந்த QR குறியீட்டை வருடுங்கள்
- மின்னஞ்சல் gdrappt@sgh.com.sg
- தொலைபேசி எண் 6321 4225
  (திங்கள் முதல் வெள்ளி: 0830 – 1800, சனிக்கிழமை: 0830 – 1230)




✓ பின்வரும் சூழ்நிலைகளில் 14 நாள் விதிமுறை உங்களுக்குப் பொருந்தாது:

- நீங்கள் 9 வயதுக்குக் குறைவானவர் அல்லது 60 வயதுக்கு மேற்பட்டவர் (பிறந்த தேதியின் அடிப்படையில்)
- உங்களது கர்ப்பப்பையை அல்லது சூலகங்கள் அகற்றப்பட்டுவிட்டன
- உங்களுக்கு மாதவிடாய் நின்றுபோய், ஓராண்டுக்குமேல் வரவில்லை
- நீங்கள் கிமோதெரபி சிகிச்சை பெறுகிறீர்கள்
- உங்களது கருப்பையில் கருத்தடை கருவி (IUCD) பொருத்தப்பட்டு, கருக்குழாய்கள் கட்டப்பட்டுள்ளன
- தற்போது நாள்தவறாமல் ஹார்மோன் கருத்தடை மாத்திரைகள் உட்கொள்கிறீர்கள்

# 14 நாள் விதிமுறையை மேலும் புரிந்துகொள்ள

**எடுத்துக்காட்டு 1**

எனது மாதவிடாய் **10 ஆகஸ்ட் 2021** தேதியில் தொடங்கியது. எனது பரிசோதனைக்குக் குறிக்கப்பட்ட தேதி **23 ஆகஸ்ட் 2021**. நான் பரிசோதனைக்குச் செல்லலாமா?

**YES**

ஏனெனில் தேதி 14 நாட்களுக்குள் இருக்கிறது

**எடுத்துக்காட்டு 2**

எனது மாதவிடாய் **10 ஆகஸ்ட் 2021** தேதியில் தொடங்கியது. எனது பரிசோதனைக்குக் குறிக்கப்பட்ட தேதி **24 ஆகஸ்ட் 2021**. நான் பரிசோதனைக்குச் செல்லலாமா?

**NO**

ஏனெனில் தேதி 14 நாட்களுக்கு மேற்பட்டிருக்கிறது



**Scan the QR code for English, Mandarin, Malay & Tamil**




Singapore General Hospital
SingHealth

Diagnostic Radiology
Outram Road
Singapore 169608
www.sgh.com.sg



Reg. No: 198705907Z
Information correct as at October 2021



PATIENTS. AT THE HEART OF ALL WE DO.